**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 122/2018**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.10.2025 | | |
| பெயர்: | கவிமன்னன்<br>(DW–1 Cross con ) | தகப்பனார் பெயர்: | லெட்சுமணன் |
| கிராமம்: | திருமுல்லைவாசல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 55/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 09.10.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.20)**

1. தாவா சொத்துகளை பொறுத்து 1ம் பிரதிவாதி லெட்சுமணன், எனது தாயார் சீதா ஆகிய இருவரும் இந்த வழக்கின் வாதிகள் மீது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 32/2011 என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கு 24.09.2012ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்துகளை பொறுத்து இந்த வழக்கின் வாதிகள் மேற்படி லெட்சுமணன், சீதா மீது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 35/2011 என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான்.

2. அ.வ.எண். 35/2011ல் லெட்சுமணன், சீதா இருவரும் இந்த வழக்கின் வாதிகளிடம் தாவா சொத்தை பொறுத்து எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. அ.வ.எண். 35/2011 கடந்த 24.11.2016ல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் அ.வ.எண். 35/2011ன் படி தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து

வருகிறது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் 2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை விற்பதாக கூறி வாதிகளின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்துக்களை கடந்த 05.04.2018ல் ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர் என்றால் சரியல்ல.

3. வாதிகள் வில்லங்க சான்றிதழை பார்த்த பிறகு தான் தாவா B ஷெடியூல் சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது பற்றி 06.04.2018ல் தான் வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா B ஷெடியூல் சொத்து செட்டில்மெண்ட் சமயத்தில் 2ம் வாதியின் வசம் இருக்கும் போது செட்டில்மெண்ட் எழுதி வைத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா B ஷெடியூல் சொத்து பொறுத்து எனது பெயரிலும், எனது சகோதரர் பெயரிலும் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. வழக்கிற்கு பிறகு எனது சகோதரருக்கு (இறந்த 3ம் பிரதிவாதி) எழுதி வைத்த செட்டில்மெண்ட் சொத்தை எனது பெயருக்கு எனது தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா A ஷெடியூல் சொத்தை 1ம் வாதியும், B ஷெடியூல் சொத்தை 2ம் வாதியும் அனுபவித்து வருவதை நானும் மற்ற பிரதிவாதிகளும் இடையூறு செய்யக்கூடாது என்றால் சரியல்ல. வாதிகள் பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**</u>

<u>**மறு விசாரணை இல்லை.**</u>

**(முடிவு நேரம்– 13.36)**